**48. அரவிந்தன் கதை**

அளகாபுரிக்கு அரசனாக இருந்த அரவிந்தன் என்பவன் வித்தியாதர செல்வத்தைப் பெற்றான். தான் கேட்டுக்கொண்ட அறவுரைகளை யெல்லாம் அடியோடு மறந்து தீய எண்ணங்கள் உடையவனானான். தீய செயல்களையே செய்து வித்தியாதர செல்வத்தையும் நுகராமல் கெட்டழிந்தான். இறுதிக்



காலத்தில் இவனுடைய தீவினைகளின் பயனால் இவனுக்குக் கொடியவெப்பு நோய் உண்டாகி யது. அதனால் மிகுந்த துன்பத்தை யடைந்தான்.அவன் கற்ற வித்தைகளும் பயன்படாதொழிந்தன. ஆகவே அவன் தன்னுடைய மூத்த மகனாகிய அரிச்சந்திரன் என் பவனை யழைத்து அவனைப்பார்த்து, "மகனே! வெப்பு நோயால் என்னுடைய உடல் மிகுந்த துன்பத்தை யடை கின்றது. இதனை நீக்கும்பொருட்டு என்னுடைய உடவில் இடப்பட்ட சந்தனக் குழம்பு முதலியவைகளினாலும் பய னில்லை. ஆகவே நீவடக்கே சிதையாற்றுக் கரையிலுள்ள பொழிலிடங்களில் உன்னுடைய வித்தைகளினால் என்னைக். கொண்டுபோய்ச் சேர்ப்பாயானால் அவ்விடத்தின் குளிர்ச்சியால் எனது வெப்பஞ் சிறிது தணியும்" என்றுசொன்னான். தந்தையின் மொழிகளைக் கேட்ட அரிச்சந்திரன், "அவ்வாறே செய்க" வென்று தான் கற்றவித்தைகளை ஏவினான். அவைகள் அரவிந்தனுடைய தீவினை மிகுதி யால் அவ்வாறு செய்யா தொழிந்தன. அரிச்சந்திரன் செய்வதொன்று மறியாமல் சும்மாவிருந்தான். அவ்வாறாக ஒரு நாள் அரவிந்தன் படுத்திருந்த இடத்திற்கு மேலே இரண்டு பல்லிகள் போரிட்டுக்கொண்டன. அவற்றினின்றும் குருதித்துளிகள் அரவிந்தனுடைய உடலின் மீது விழுந்தன. அவை வீழ்ந்த இடத்தில் வெப்ப நோய் சிறிது தணிந்தது. அரவிந்தன் தன்னுடைய மடமையினால் நம்முடைய நோய்க்கு இதுவே சிறந்த மருந்து போலும் என்று எண்ணினான். குருதியில் மூழ்கினால் நோய் அடி யோடு தணிந்துபோகும் என்று எண்ணினான். ஓரிடத்தில் விலங்குக்கூட்டங்கள் நிற்பதைக் கண்டான். தன்னுடைய இளைய மகனாகிய குருவிந்தன் என்பவனைப் பார்த்து, "இவ்விலங்குக் கூட்டங்களைக் கொன்று உதிரக்குளம் ஒன்றை எனக்கு அமைத்துத் தருவாயாக" என்று கூறினான். இதனைக் கேட்ட குருவிந்தன் தீவினைக்கு அஞ்சினான். இதற்கு யாது செய்வதென்று எண்ணினான். இவ்வாறுசெய்தால் தன்னுடைய தந்தை நரகத்தை யடைவான் என்று தெளிந்தான். தந்தையின் விருப்பத்தை நிறைசெய்தான். உதிரம் வேற்ற வேண்டுமென்று முடிவு போன்ற பொருளால் ஒரு குளத்தை உண்டாக்கித் தன் னுடைய தந்தைக்குக்காட்டினான். தந்தை மகிழ்ந்து அப் போலி உதிரக் குளத்தில் மூழ்கி உதிரத்தை வாயில் அள்ளிக்கொப்பளித்தான். அஃது உதிரமன்றென்றும் உதிரத்தைப் போன்ற

ஒரு பொருளென்றும் அறிந்தான். குருவிந்தன்மீது மிகுந்த சினங்கொண்டான். அவனைக் கொல்லும் பொருட்டுக் கத்தியை உருவிக்கொண்டு ஓடினான். அவ்வாறு ஓடும்பொழுது அக்கத்தியின்மீது அவனே வீழ்ந்து மாண்டான். மாறுபாடான காரியங்களைச் செய்பவர்கள்வீணாகத் தொல்லைக்குள்ளாவார்கள்.

[மாறுபாடான காரியம் புரிவோர்]